


நேற்று (26.07.2025) மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் சென்னை எழும்பூர், அரசு தாய் சேய் நல மருத்துவமனையில், முத்தமிழறிஞர் கலைஞர் நினைவு பன்னாட்டு மாரத்தான் 2022ல் வந்த பதிவுத்தொகை ரூ.5.89 கோடியில் கட்டப்பட்டு வரும் விடுதியையும், ரூ.53 கோடி மதிப்பீட்டில் 82,000 சதுர அடி பரப்பளவில் கட்டப்பட்டு வரும் குழந்தைகளுக்கான பிரத்தியேக சிறப்பு பிரிவு பிரம்மாண்ட கட்டிடப் பணிகளையும் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். இந்நிகழ்வில் பெருநகர சென்னை மாநகராட்சி வடக்கு வட்டார துணை ஆணையர் கட்டா ரவி தேஜா, மருத்துவக்கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்குநர் (பொ) மரு.தேரணிராஜன், அரசு குழந்தைகள் நல மருத்துவமனை மற்றும் ஆராய்ச்சி நிலைய இயக்குநர் மரு.லட்சுமி வேல்முருகன், அரசு மகப்பேறு மற்றும் குழந்தைகள் நல மருத்துவமனை இயக்குநர் மரு.சுமதி, பொதுப்பணித்துறை கண்காணிப்பு பொறியாளர் கார்த்திகேயன் மற்றும் உயரலுவலர்கள் உடனிருந்தனர்.

செங்கல்பட்டு மாவட்டம், சித்தாமூர் ஒன்றியம், மேலமருவத்தூர் ஊராட்சியில் செய்யூர் சட்டமன்ற உறுப்பினர் மு.பாபு தொகுதி மேம்பாட்டு நிதி ரூ.10.11 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள நியாய விலைக்கடை கட்டிடத்தினை ஊராட்சி மன்ற தலைவர் லட்சுமி பங்காரு அடிகளார் தலைமையில் அமைச்சர் தா.மோ.அன்பரசன் திறந்து வைத்தார். உடன் பனையூர் மு.பாபு (வி.சி.க.), ஒன்றியக் குழு பெருந்தலைவர் ஏழுமலை அகத்தியன், பேரூர் செயலாளர் மோகன்தாஸ், கவுன்சிலர்கள் ஜனனி, நாகப்பன், ஊராட்சி மன்ற தலைவர்கள் ஸ்ரீதர், நிர்மல் குமார், குமுதா மதுரை, விசிக மாவட்ட செயலாளர் தமிழினி, முன்னாள் மாவட்ட செயலாளர் ஆதவன் உள்ளிட்ட அதிகாரிகள் கலந்து கொண்டனர்.



### முத்தமிழறிஞர் கலைஞர் நினைவு பன்னாட்டு மாரத்தான் போட்டி 2022ல் வந்த பதிவுத்தொகை

# ரூ.5.89 கோடியில் கட்டப்படும் விடுதி - ரூ.53 கோடியில் குழந்தைகளுக்கான சிறப்புப் பிரிவு கட்டிடங்கள்!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்!

சென்னை, ஜூலை 27–

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, முத்தமிழறிஞர் கலைஞர் நினைவு பன்னாட்டு மாரத்தான் – 2022–ல் வந்த பதிவுத் தொகை ரூ.5.89 கோடியில் கட்டப்பட்டு வரும் விடுதியையும், ரூ.53 கோடி மதிப்பீட்டில் 82,000 சதுர அடி பரப்பளவில் கட்டப்பட்டு வரும் குழந்தைகளுக்கான பிரத்தியேக சிறப்புப் பிரிவு பிரம்மாண்ட கட்டிடப் பணிகளை மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று (26.07.2025) சென்னை எழும்பூர், அரசு தாய் சேய் நல மருத்துவமனையில், முத்தமிழறிஞர் கலைஞர் நினைவு பன்னாட்டு மாரத்தான் – 2022–ல் வந்த பதிவுத் தொகை ரூ.5.89 கோடியில் கட்டப்பட்டு வரும் விடுதியையும், ரூ.53 கோடி மதிப்பீட்டில் 82,000 சதுர அடி பரப்பளவில் கட்டப்பட்டு வரும் குழந்தைகளுக்கான பிரத்தியேக சிறப்பு பிரிவு பிரம்மாண்ட கட்டிடப் பணிகளையும் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

பிறகு அமைச்சர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:–

எழும்பூர் அரசு குழந்தைகள் நல மருத்துவமனையில் இந்த அரசு போறுப்பேற்ற பிறகு தமிழ்நாட்டின் முதலமைச்சரின் வழிகாட்டுதலோடு பல்வேறு புதிய கட்டமைப்புகள் தொடர்ந்து ஏற்படுத்தப்பட்டுள்ளது. அந்த வகையில் இந்த மருத்துவ வளாகத்தில் 82,000 சதுர அடி பரப்பளவில் தரைதளம் மற்றும் ஆறு தளங்களுடன் கூடிய ஒரு கட்டிடம் ஒன்று கட்டும் பணி முழுமை அடையும் தருவாயில் உள்ளது. இந்த கட்டிடம் ரூ.53 கோடி செலவில் கட்டப்பட்டு 100 படுக்கைகள்ளுடன் கொண்ட மருத்துவமனையாக அக்டோபர் மாதம் இறுதில் பணிகள் முடிவடைந்து மக்கள் பயன்பாட்டிற்கு வர உள்ளது. இந்த பணிகள் இன்று ஆய்வு மேற்கொள்ளப்பட்டு அக்டோர் மாத இறுதிக்குள் முடிவடைய பணிகள் விரைவு படுத்தப்பட்டுள்ளது

அதேபோல் இவ்வலுவலகத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நினைவு நாளையொட்டி 2022 கலைஞர் நினைவு பன்னாட்டு மாரத்தான் ஒன்று நடத்தப்பட்டது அந்த மாரத்தானில் ஒவ்வொருவரும் பங்கேற்க்கும் வகையில் பதிவு கட்டணமாக ரூ300 செலுத்தினர் அதன் ஒட்டுமொத்த தொகை ரூ.1,22,50,000 ஆகும். அத்தொகை முழுவதும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களிடம் தந்து இந்த மருத்துவமனை வளாகத்தில் கிரமபுறங்களில் இருந்து வருகின்ற பெற்றோர்கள் தங்களுடைய குழந்தைகளின் சிகிச்சைக்கு தங்க இடம் இல்லாமல் பல்வேறு இடங்களில் தங்குகின்ற சூழ்நிலை உள்ளது.

இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு அதுபோன்ற வருகின்ற மிக ஏழ்மையான பெற்றோர்களின் குழந்தைகளுக்கு நாங்கள் எங்கள் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்தில் தங்க வைத்து சட்டமன்ற விடுதியில் தொடர்ந்து தங்கவைத்து சிகிச்சை அளித்துள்ளோம்.

இந்த நிலையில் 2022–ஆம் ஆண்டு நடைபெற்று மாரத்தான் போட்டியில் கிடைத்த பதிவுத்தொகை கட்டணம் 1,22,50,000 ரூபாயை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களிடத்தில் தந்து நமக்கு நாமே திட்டத்தின் கீழ் ஒரு புதிய தங்கும் விடுதி ஒன்று கட்டப்பட வேண்டும் என்ற கோரிக்கைக்கு ஏற்ப பணிகள் தொடங்கி வைக்கப்பட்டது. இந்த ரூ.1.22 கோடியோடு சேர்த்து National Urban Livelihoods Mission என்று சொல்லப்படுகிற அமைப்பின் நிதி உதவி பெற்று ரூ.5.81 கோடி மதிப்பீட்டில் இங்கே ஒரு கட்டிடம் நிறைவுறும் தருவாயில் இருக்கிறது.

செப்டம்பர் இறுதியில் இந்த கட்டிடம் பணி நிறைவுறும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதில் 100 பேர் தங்கும் வசதி ஏற்படுத்தப்ப ட்டுள்ளது. ஏழ்மை நிலையிலிருக்கிற பெற்றோர் இங்கே வந்து அவர்களுடைய குழந்தை களை அனுமதித்து விட்டு, இங்கே வந்து தங்கியிருந்து சிகிச்சைக்கு பிறகு அவர்கள் நிம்மதியாக வீடு செல்லலாம் என்கிற வகையில் அவர்களுக்கு இந்த கட்டிடம் அமையவிருக்கிறது.

அவர்களுக்கான உணவு வசதிகளை கூட நாம் இப்போது சி.எஸ்.ஆர் நிதி பங்களிப்புடன் செய்யவிருக்கிறோம். அதற்காக இந்தியன் ஆயில் நிறுவனத்தோடு பேசிக்கொண்டிருக்கிறோம். அவர்கள் தங்கும்போது இங்கேயே அவர்களுக்கு மூன்று வேலை உணவையும் சி.எஸ்.ஆர் நிதி பங்களிப்போடு செய்யவிருக்கிறோம். அதற்கேற்றார்போல் இந்த கட்டிடம் வடிவமைக்கப்பட்டிருக்கிறது.

தரைதளத்தை பொருத்த வரை, இந்த சமையலறை அதாவது உணவருந்தும் கூடம் போன்ற பல்வேறு வசதிகளும் அதற்கு அடுத்தடுத்து நான்கு தளங்களில் அந்த கட்டிடத்தில் ஒரு தளத்திற்கு 25 பேர் தங்குவதற்கு, அவர்களுடைய உடைகள் வைத்துக் கொள்வதற்கு அலமாரி போன்ற பல்வேறு வசதிகளுடன் கட்டிடம் கட்டும் பணி நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. செப்டம்பர் இறுதியில் இந்த பணிகள் நிறைவடை யவிருக்கிறது.

இந்நிகழ்வில் பெருநகர சென்னை மாநகராட்சி வடக்கு வட்டார துணை ஆணையர் கட்டா ரவி தேஜா, மருத்துவக்கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்குநர் (பொ) மரு.தேரணிராஜன், அரசு குழந்தைகள் நல மருத்துவமனை மற்றும் ஆராச்சி நிலைய இயக்குநர் மரு.லட்சுமி வேல்முருகன், அரசு மகப்பேறு மற்றும் குழந்தைகள் நல மருத்துவமனை இயக்குநர் மரு.சுமதி, பொதுப்பணித்துறை கண்காணிப்பு பொறியாளர் கார்த்திகேயன் மற்றும் உயரலுவலர்கள் உடனிருந்தனர்.

### தமிழ்நாடு உட்பட நாடு முழுவதும் மிஷன் வாத்சல்யா திட்டத்தின் கீழ்

# குழந்தைகள் பாதுகாப்பு - பராமரிப்பு - வளர்ச்சியை உறுதி செய்ய வழிமுறைகள் உள்ளதா?

## மக்களவையில் காஞ்சிபுரம் எம்.பி. – க.செல்வம் கேள்வி!

*புதுடெல்லி, ஜூலை 27 -* காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் அவர்கள் 25.07.2025 அன்று நடைபெற்ற நாடாளுமன்ற மழைக் கால கூட்டத் தொடரில் பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகத்துக்கு எழுப்பிய கேள்விகள்.

(அ) தமிழ்நாடு உட்பட நாடு முழுவதும் கடினமான சூழ்நிலைகளில் உள்ள குழுந்தைகளின் நலன் மற்றும் மறுவாழ்வுக்காக மிஷன் வாத்சல்யா திட்டத்தை அரசு செயல்படுத்துகிறதா.

(ஆ) அப்படியானால், மிஷன் வாத்சல்யா திட்டத்தின் நோக்கங்கள் / முக்கிய கூறுகள் குறிப்பிடுவது குழந்தை பாதுகாப்பு, பாரமரிப்பு மற்றும் வளர்ச்சியை உறுதி செய்யும் தொலை நோக்குப் பார்வையுடன் அது எவ்வாறு ஒத்துப்போகிறது.

(இ) மிஷன் வாத்சல்யாவின் கீழ் குழந்தைகள் பாதுகாப்பிற்கு முன்னுரிமை அளிக்க ஏதேனும் உத்தி/வழிமுறை வரைவு வகுக்கப்பட்டுள்ளதா, அப்படியானால், அதன் விவரங்கள்.

(ஈ) மேற்படி மாநிலத்தில் மிஷன் வாத்சல்யாவின் கீழ் ஆதரிக்கப்படும் குழந்தை பராமரிப்பு நிறுவனங்கள் மற்றும் சிறப்பு தத்தெடுப்பு நிறுவனங்கள் எண்ணிக்கை மற்றும் வகைகள் யாவை?

ஒன்றிய அமைச்சரின் பதில்கள் வருமாறு:-

(அ) முதல் (இ) தமிழ்நாடு உட்பட அனைத்து மாநிலங்கள்/யூனியன் பிரதேசங்களிலும் மத்திய அரசின் நிதியுதவியுடன் கூடிய 'மிஷன் வாத்சல்யா' என்ற திட்டத்தை பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகம் செயல்படுத்தி வருகிறது. நிறுவன பராமரிப்பு மற்றும் நிறுவனம் சாராத பராமரிப்பு சேவைகள் உள்ளிட்ட கடினமான சூழ்நிலைகளில் உள்ள



குழந்தைகளுக்கு பல்வேறு சேவைகளை வழங்க மத்திய மற்றும் மாநில அரசுகளுக்கு இடையே முன் வரையறுக்கப்பட்ட செலவுப் பகிர்வு, அடிப்படை திட்டங்கள்/ திட்டங்களை வடிவமைக்கும்போது குழந்தைகளின் சிறந்த நலன்கள் எப்போதும் கவனிக்கப்படுவதை உறுதி செய்வதே மிஷன் வாத்சல்யாவின் நோக்கமாகும். இதில் அத்தியாவசிய சேவைகள். குழந்தைகளுக்கான அவசரகால சேவைகளை நிறுவுதல் மற்றும் நிறுவன மற்றும் நிறுவனம் சாராத பராமரிப்பு சேவைகளை வலுப்படுத்துதல் ஆகியவை அடங்கும்.

மிஷன் வாத்சல்யா திட்டம், குடினமான சூழ்நிலைகளில் வாழும் குழந்தைகள் இலக்குகளை அடைவதற்காக மாநில மற்றும் மாவட்ட அளவில் சட்டரீதியான சேவை வழங்கும் கட்டமைப்புகளை அமைப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது. மிஷன் வாத்சல்யா திட்டத்தின் கீழ், ஒவ்வொரு மாநிலம்/யூனியன் பிரதேசங்களி லும் மாநில குழந்தைகள் பாதுகாப்பு சங்கம் (SCPS) மற்றும் மாநில தத்தெடுப்பு வள நிறுவனம் (SARA) ஆகியவை அமைக்கப்பட்டுள்ளன. மேலும் மாவட்டங்களில் குழுந்தைகள் நலக் குழு, சிறார் நீதி வாரியம் மற்றும் மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு ஆகியவை அமைக்கப்பட்டுள்ளன.

மிஷன் வாத்சல்யா திட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட குழந்தை பராமரிப்பு நிறுவனங்கள் (CCIs), வயதுக்கு ஏற்ற கல்வி, தொழில் பயிற்சி, பொழுதுபோக்கு, சுகாதாரப் பராமரிப்பு. ஆலோசனை போன்றவற்றை ஆதரிக்கின்றன. நிறுவனம் சாராத பராமரிப்பின் கீழ் ஆதரவு, பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு தேவைப்படும் குழந்தை களுக்கு நிதியுதவி, வளர்ப்பு பராமரிப்பு மற்றும் பராமரிப்புக்குப் பிந்தைய பராமரிப்பு மூலம் வழங்கப்படுகிறது.

நிறுவன பரமரிப்பு மற்றும் நிறுவனம் சாராத பராமரிப்பு சேவைகள் உள்ளிட்ட கடினமான சூழ்நிலைகளில் உள்ள குழுந்தைகளுக்கு பல்வேறு சேவைகளை வழங்க மத்திய மற்றும் மாநில அரசுகளுக்கு இடையே முன் வரையறுக்கப்பட்ட செலவுப் பகிர்வு அடிப்படை திட்டங்கள்/திட்டங்களை வடிவமைக்கும்போது குழந்தைகளின் சிறந்த நலன்கள் எப்போதும் கவனிக்கப்படுவதை உறுதி செய்வதே மிஷன் வாத்சல்யாவின் நோக்கமாகும். இதில் அத்தியாவசிய சேவைகள், குழுந்தைகளுக்கான அவசரகால சேவைகளை நிறுவுதல் மற்றும் நிறுவனம் சாராத பராமரிப்பு சேவைகளை வலுப்படுத்துதல் ஆகியவை அடங்கும்.

மிஷன் வாத்சல்யா திட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட குழந்தை பராமரிப்பு நிறுவனங்கள் (CCIs), வயதுக்கு ஏற்ற கல்வி, தொழில் பயிற்சி, பொழுதுபோக்கு, சுகாதாரப் பராமரிப்பு, ஆலோசனை போன்றவற்றை ஆதரிக்கின்றன. நிறுவனம் சாராத பராமரிப்பின் கீழ் ஆதரவு, பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு தேவைப்படும் குழந்தைகளுக்கு நிதியுதவி, வளர்ப்பு பராமரிப்பு மற்றும் பராமரிப்புக்குப் பிந்தைய பராமரிப்பு மூலம் வழங்கப்படுகிறது.

மிஷன் வாத்சல்யா திட்டம் என்பது நிலையான வளர்ச்சி இலக்குகளுடன் இணைந்த குழுந்தை மேம்பாடு மற்றும் குழுந்தை பாதுகாப்பின் முன்னுரிமைகளை அடைவதற்கான ஒரு திட்டமாகும். இது சிறார் நீதி பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு அமைப்பை வலுப்படுத்துவதோடு, குழந்தை உரிமைகள், வக்காலத்து மற்றும் விழிப்புணர்வை வலியுறுத்துகிறது.

இவ்வாறு ஒன்றிய அமைச்சர் பதிலளித்தார்.



சென்னை தெற்கு மாவட்டம், சோழிங்கநல்லூர் மேற்குப் பகுதி, மடிப்பாக்கம் அ.தி.மு.க.வை சார்ந்த டி.சந்திரசேகர், என்.கோகுலகிருஷ்ணன், பி.உதயகுமார், கார்த்திக், ஜெயராஜ் ஆகியோர் அ.தி.மு.க.வில் இருந்து தங்களை விடுவித்து கொண்டு அமைச்சர் மா.சுப்பிரமணியன் முன்னிலையில் தி.மு.க.வில் இணைந்தனர். இந்த நிகழ்வில் சோழிங்கநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் அரவிந்த் ரமேஷ், பகுதிச் செயலாளர்கள் எஸ்.வி. ரவிச்சந்திரன், 187 வது வட்ட செயலாளர் எம்.கே.ஜெ, மாவட்ட பிரதிநிதி எம்.கே.ராமகிருஷ்ணன், மாவட்ட மாணவரணி துணை அமைப்பாளர் ஈஸ்வர மூர்த்தி, பகுதி துணைச் செயலாளர் திலகவதி, மாவட்ட தொழிலாளர் அணி துணை அமைப்பாளர் ஹரிகிருஷ்ணன், பகுதி அமைப்பாளர் அருண்குமார், விசுவநாதன் ஆகியோர் உடனிருந்தனர்.

### புகார் கொடுத்த வழக்குரைஞரை சம்பந்தப்பட்ட நீதிபதியே அழைத்து மிரட்டுவது சரியா?

# நீதிமன்றத்தின் மாண்புகள் மக்கள் மத்தியில் மதிப்பிழக்கக் கூடாது!

## திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கை!

*சென்னை, ஜூலை 27-*

மதுரை வழக்குரைஞர் வாஞ்சிநாதன் உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதிக்கு சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி மாண்பமை ஜஸ்டிஸ் ஜி.ஆர்.சுவாமிநாதன்மீது புகார் மனு கொடுத்துள்ளார்.

இந்நிலையில், சம்பந்தப்பட்ட நீதிபதியே புகார் கொடுத்த வழக்குரைஞரை அழைத்து மிரட்டுவது சரியா?

நீதிமன்றத்தினுடைய மாண்புகள் மக்கள் மத்தியில் மதிப்பிழக்கக் கூடாது! என திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி தமது அறிக்கையில் கூறியுள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு :-

சென்னை உயர்நீதிமன்றத்தின் மதுரை கிளையில் 24.7.2025 அன்று நடைபெற்ற வழக்கு விசாரணை ஒன்றின் போது, அந்த வழக்கிலிருந்து விலகி விட்ட வழக்குரைஞர் வாஞ்சிநாதன் அவர்களுக்கு சம்மன் கொடுத்து நீதிமன்றத்திற்கு மாண்புமிகு ஜஸ்டிஸ் ஜி.ஆர்.சுவாமிநாதன் அவர்கள் அழைத்ததாகவும், அவ்வழக்கில் தற்போது தான் வாதாடவில்லை என்பதை வழக்குரைஞர் வாஞ்சிநாதன் தெரிவித்த பிறகு, "இந்தக் கேள்விக்கு பதில் சொல்லுங்கள்" என்று சொல்லி, "ஜாதி ரீதியாக நான் தீர்ப்பு வழங்குவதாக நீங்கள் குற்றம் சாட்டுகிறீர்களா?" என்று கேள்வி எழுப்பி இருக்கிறார் என்றும் செய்தி வெளிவந்துள்ளது.

இதன் பின்னணியில், கடந்த மாதத்தில் வழக்குரைஞர் வாஞ்சிநாதன் அவர்கள் உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதிக்கு, மாண்புமிகு ஜஸ்டிஸ் ஜி.ஆர். சுவாமிநாதன் அவர்களின் பல்வேறு தீர்ப்புகளைச் சுட்டிக்காட்டி அனுப்பிய புகார் கடிதம் இருப்பதாகச் சொல்லப்படுகிறது.

**ஜனநாயகத்தில் நீதிமன்றங்கள் தான் மக்களின் கடைசி நம்பிக்கை!**

வழக்குரைஞரை நேரில் அழைத்து மாண்புமிகு ஜஸ்டிஸ் ஜி.ஆர்.சுவாமிநாதன் அவர்கள் உயர்நீதிமன்ற பதிவாளர் மூலம் நீதிமன்ற அவமதிப்பு நோட்டீஸ் கொடுக்கலாமா? உயர்நீதிமன்றத்தின் நிர்வாகப் பொறுப்பில் இருக்கக் கூடிய சென்னை உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதியின் அனுமதியோடு இது கொடுக்கப்பட்டிருக்கிறதா?

ஜனநாயகத்தில் நீதிமன்றங்கள் தான் மக்களின் கடைசி நம்பிக்கை. இந்திய அரசமைப்புச் சட்டத்தின்படி, நீதிபதிகள் பதவியேற்கும் போது ஏற்கும் உறுதிமொழியில், சொந்த விருப்பு வெறுப்பு இல்லாமல் அவர்கள் கடமைகளைச் செய்ய வேண்டும் என்பது தான் அடிப்படைத் தத்துவமாகும்.

பலமுறை கண்டனங்கள் எழுந்துள்ளன!

ஆனால், குறிப்பிட்ட மாண்புமிகு நீதிபதி ஜஸ்டிஸ் ஜி.ஆர்.சுவாமிநாதன் அவர்கள் சென்னை உயர் நீதிமன்றத்திலும் அதன் மதுரை கிளையிலும் அளித்த பல தீர்ப்புகளில் ஒரு குறிப்பிட்ட கருத்தியலின் சார்பும், ஜாதியப் பாதுகாப்பு உணர்வும் இருப்பதாக நாங்களே பலமுறை பொது மன்றங்களில் தெரிவித்துள்ளோம்.

ஒருமுறை தேவை இல்லாமல் தந்தை பெரியார் அன்னை மணியம்மையார் திருமணத்தைப் பற்றிப் பேசி கொச்சைப்படுத்தினார். பகுத்தறிவுவாதிகள்பற்றியும் கிண்டலடித்திருக்கிறார்.

**ஒப்பற்ற தலைவர் தந்தை பெரியார்!**

பெரியார் என்பவர் இந்திய அரசால் தாமிரப் பட்டயம் அளித்து கவுரவிக்கப்பட்டவர், நினைவு அஞ்சல் தலை வெளியிடப்பட்டு பெருமைப் படுத்தப்பட்ட தலைவர்.

தமிழ்நாட்டின் தந்தை என்று கருதப்படக் கூடியவர். இதே நீதிமன்றத்தில், மாண்பமை நீதிபதி ஒருவரால் "இந்தியாவுக்கு எப்படி மகாத்மா காந்தி அவர்கள் தந்தையோ, அப்படி தமிழ்நாட்டுக்கு தந்தை பெரியார்" என்று வர்ணிக்கப்பட்டவர். சமூக நீதிக்காக இந்திய நாடாளுமன்றத்தில் குறிப்பிடப்பட்டு நன்றி செலுத்தப்பட்டு இருப்பதைப் போலவே, உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பிலும் குறிப்பிட ப்பட்ட பெருமைக்குரிய ஒப்பற்ற தலைவர். அப்படிப்பட்ட கோடானுகோடி மக்களுக்கான தலைவரை, சிறிதும் தொடர்பற்ற ஒரு வழக்கில், தான் வழங்கிய தீர்ப்பில் கொச்சைப்படுத்தியதை அப்போதே சுட்டிக்காட்டிக் கண்டித்திருக்கிறோம்.

**மனித மாண்புக்கும், அறிவியல் சிந்தனைக்கும் மாறான தீர்ப்பு!**

அது மட்டுமல்லாமல், இன்றைய அறிவியல் யுகத்தில், கரூரில் பார்ப்பனர்கள் உண்ட எச்சில் இலையில் பார்ப்பனர் அல்லாதார் உருளும் மனிதத் தன்மையற்ற நிகழ்ச்சி தடை செய்யப்பட்டபோது, அதன் மூலம் சட்டம் - ஒழுங்கைச் சரிசெய்ய அரசு முயற்சித்த போது, அதற்கு எதிராக மாண்பமை நீதிபதி ஜஸ்டிஸ் ஜி.ஆர். சுவாமிநாதன் அவர்கள் வழங்கிய தீர்ப்பை சார்பற்றது என்று எப்படி கூறுவது? இந்திய அரசமைப்புச் சட்டம் வலியுறுத்தும் மனித மாண்புக்கும், அறிவியல் மனப்பான்மைக்கும் (51 ஏஏச்) மாறான தீர்ப்பு என்று அப்போதே சுட்டிக் காட்டி விளக்கியிருக்கிறோம்.

இந்தியாவைப் பீடித்த



பெரும் சமூக நோயான ஜாதி தீண்டாமை ஒழிப்புக்காக தமிழ்நாடு தி.மு.க. அரசால் அரும்பாடுபட்டு கொண்டுவரப்பட்டது அனைத்து ஜாதியினரும் அர்ச்சகர் ஆகும் சட்டமாகும்.

50 ஆண்டுகள் மக்கள் மன்றங்களிலும் நீதிமன்றங்களிலும் போராடி உச்ச நீதிமன்றத்தின் இறுதித் தீர்ப்பையும் சாதகமாகப் பெற்றதற்குப் பிறகும், அது தொடர்புடைய பல்வேறு வழக்குகளில் மாண்பமை நீதிபதி ஜஸ்டிஸ் ஜி.ஆர். சுவாமிநாதன் அவர்களின் ஒரு சார்பு நிலையைப் பிரதிபலிக்கும் வகையில் அமைந்த தீர்ப்புகளும் உண்டு. வாஞ்சிநாதன் போன்ற வழக்குரைஞர்கள் இதற்காக வாதாடியும் உள்ளனர்.

மற்றொரு சமூகநீதி சம்பந்தமான வழக்கில் வாதாட வந்த மூத்த வழக்குரைஞர் நாடாளுமன்ற உறுப்பினர் பி.வில்சன் அவர்களைப் பார்த்து, மாண்பமை நீதிபதி ஜஸ்டிஸ் ஜி.ஆர்.சுவாமிநான், உரிய மாண்பை மீறி விளித்ததும் இந்த நேரத்தில் சுட்டிக்காட்டப்பட வேண்டிய நீதிபதியின் நடத்தையாகும்.

அது மட்டுமல்ல, ஒரு குறிப்பிட்ட சமுதாயத்தை இழிவுபடுத்திப் பேசியதாக தொடரப்பட்ட அவதூறு வழக்கில், எப்போதும் தன்னுடைய ஜாதியைப் பெருமையாகப் பேசும் ஒரு பெண் கைது செய்யப்பட்டு, சிறைக்கு அனுப்பப்படுகிறார். ஓரிரு நாளில் அவர் ஜாமீனில் வெளியே வருவதற்கு உயர்நீதிமன்றத்தை நாடுகிறார். அது விசாரணைக்கு வருகிறது. அந்தச் சமயத்தில் ஒரு செய்தியும் ஊடகங்களில் வெளிவருகிறது.

வழக்கு வேறொரு நீதிபதியிடம் விசாரணைக்கு வருவதற்கு முன்னாலேயே மாண்புமிகு நீதிபதி ஜஸ்டிஸ் ஜி.ஆர். சுவாமிநாதன் அவர்களின் மனைவி, சமூக ஊடகங்களில் அறிக்கை ஒன்றை விடுத்து, ஜாதி உணர்வுடன் பேசிய அந்தப் பெண்ணைக் குப் பச்சரா பம் தேடிக் கொடுத்த நடைமுறை சரியானதா? அதை நீதிமன்றங்கள் ஏற்குமா?

மாண்பமை நீதிபதி, தன்னுடைய பார்வை எப்படிப்பட்டது, எந்தத் தத்துவத்தை தான் ஏற்று நடந்து வருகிறோம் என்பதை, தாமே பல பொது மேடைகளில் தொடர்ந்து பேசியும் இருக்கிறார்.

இவற்றைச் சுட்டிக்காட்டி இந்தப் போக்கை அவர் மாற்றிக் கொள்ள வேண்டும் என்பதாக மக்கள் மன்றங்களில் எடுத்து விளக்கி இருக்கிறோம். ஓய்வு பெற்ற நீதிபதி ஒருவரும் இத்தகைய போக்குகளைச் சுட்டிக்காட்டி அதே மேடையில் தனது கருத்துகளைத் தெரிவித்து இருக்கிறார்.

நீதிபதிகளாக நியமிக்க ப்படும் எவருக்கும் தனிப்பட்ட கொள்கைகள் இருக்கலாம். அது அவரவர் உரிமையாகும். ஆனால், நீதிபதியான பிறகு, அந்தக் கொள்கைகள் நீதிமன்றத் தீர்ப்புகளில் பிரதிபலிக்க விடக் கூடாது என்று உச்சநீதிமன்றத்தின் மேனாள் நீதிபதி அவர்கள் தன்னுடைய வாழ்க்கை வரலாற்றில் எழுதியிருப்பதை இங்கு சுட்டிக்காட்டுவது பொருத்தமாகும்.

இப்படியான பலரும் அறிந்த ஒரு பொது பிரச்சினைக்கு அரசமைப்புச் சட்டப் படியாக வழங்கப்பட்டிருக்கும் வாய்ப்பைப் பயன்படுத்தி உச்சநீதிமன்றத்திற்கு ஒரு வழக்குரைஞர் புகார் அனுப்பினால், அவரை நீதிமன்றத்தில் தனிப்பட்ட முறையில் அழைத்து மிரட்டுவது போல் பேசுவது ஏற்கத்தக்கதா?

தன் மீது புகார் கொடுக்கப்பட்டால், மாண்பமை ஜஸ்டிஸ் ஜி.ஆர்.சுவாமிநாதன் அவர்கள், அதற்குரிய இடத்தில் பதில் விளக்கம் தர வேண்டுமே தவிர, புகார் அளித்தவரை நீதிமன்றத்தில் அழைத்து மிரட்டுவது என்பது எவ்வகையில் சரியானது?

இப்படிப்பட்ட நீதிப் போக்கு சம்பந்தமான குறிப்பிட்ட மாண்பமை நீதிபதியின் நடத்தையை நாங்கள் பொதுமன்றத்தில் எடுத்து விளக்கியிருக்கிறோம் பொது நலக் கண்ணோட்டத்தோடு! அவர் பற்றி தனிப்பட்ட விருப்பு வெறுப்பு எதுவும் கிடை யாது.

நீதிமன்ற எல்லைக்குள்ளேயே தீர்வு காணப்பட வேண்டிய இந்தப் பிரச்சினை, மக்கள் மன்றத்திற்கு வர வேண்டிய நிர்ப்பந்தத்தை உருவாக்கலாமா?

இது ஒரு வழக்குரைஞர் - நீதிபதி என்பதைத் தாண்டி, மக்கள் மன்றப் போராட்டத்திற்கு வழிவகுக்க விடலாமா?

நீதிமன்றத்தினுடைய மாண்புகள் மக்கள் மத்தியில் மதிப்பிழக்கக் கூடாது என்னும் பொது நோக்கோடு இதனை எழுதுகின்றோம்.

இவ்வாறு திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி தமது அறிக்கையில் கூறியுள்ளார்.



கழகத்தின் உரிமைப் போர் முரசம் முரசொலி ஏட்டின் வாசகர் வட்டத்தை, சென்னையில் கடந்த 02/06/2025 இல் கழகத் தலைவர் தளபதி அவர்கள், கலைஞர் அரங்கில் தொடங்கி வைத்து வாழ்த்தினார்கள். இதன் முதல் கருத்தரங்க நிகழ்ச்சியில் அமைச்சர். மா.சுப்பிரமணியன் தொடக்க உரையாற்றினார். பேரா.சுப.வீரபாண்டியன் "இந்திய அரசியல் அரங்கில் திராவிட இயக்கத்தின் உரிமைக் குரல்! எனும் தலைப்பில் பல்வேறு வரலாற்று நிகழ்வுகளையும், பகுத்தறிவு கருத்துகளை எடுத்துக் கூறினார். இந்நிகழ்வில் சட்டமன்ற உறுப்பினர்கள் எஸ்.அரவிந்த் ரமேஷ், காரம்பாக்கம் கணபதி, ஏ.எம்.வி பிரபாகரராஜா, எம்.எஸ்.ஹரி.பாபு, வாசகி பாண்டியன், எம்.கிருஷ்ணமூர்த்தி, இரா துரைராஜ், கோவிலம்பாக்கம் வெங்கடேசன், சைதை மா.அன்பரசன், கனக்காடி எல்லப்பன், மின்னல் கந்தப்பன், கோட்டூர் பிரகாஷ், வழக்கறிஞர் தடா ஒ.சுந்தரம், நாடி முத்து மணிகண்டன், பா.அருண்குமார், ஜெகதீசன், கொட்டிவாக்கம் பார்த்திபன், பொள்ளாச்சி மா.உமாபதி, தமிழ்செல்வன் உள்ளிட்ட வாசகர் வட்ட பகுதி அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் ஏராளமானோர் கலந்து கொண்டு கருத்துக்களை செவிமடுத்தனர்.